டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.11.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 120 - Madurai | Online Edition

# ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாத திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல்

புது தில்லி, நவ.13

உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 100% கடன் உத்தரவாத காப்பீட்டை வழங்குவதற்காக, ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்தை அறிமுகப்படுத்த பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன் மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ) உட்பட தகுதியான ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.20,000 கோடி வரை கூடுதல் கடன் வசதிகளை வழங்க முடியும்.

**செயல்படுத்தல் உத்தி மற்றும் இலக்குகள் :** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உட்பட தகுதியான ஏற்றுமதியாளர்களுக்கு உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் கூடுதல் கடன் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கடன் உத்தரவாத அறங்காவலர் நிறுவனம் மூலம் நிதிச் சேவைகள் துறையால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். நிதிச் சேவைகள் துறை செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு மேலாண்மைக் குழு, திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அமலாக்கத்தை மேற்பார்வையிடும்.

**முக்கிய தாக்கம் :** இந்தத் திட்டம் இந்திய ஏற்றுமதியாளர்களின் உலகளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்துவதுடன், புதிய மற்றும் வளர்ந்து வரும் சந்தைகளில் பல்வகைப்படுத்தலை ஆதரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் பிணையம் இல்லாத கடன் அணுகலை செயல்படுத்துவதன் மூலம், இது பணப்புழக்கத்தை வலுப்படுத்தும், சுமூகமான வணிக நடவடிக்கைகளை உறுதி செய்யும், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி இலக்கை அடைவதற்கான இந்தியாவின் முன்னேற்றத்தை வலுப்படுத்தும். இது தற்சார்பு இந்தியாவை நோக்கிய இந்தியாவின் பயணத்தை மேம்படுத்தும்.

# பட்டுக்கோட்டை வட்டார விதைப்பண்ணையில் விதை சான்று மற்றும் அங்கக சான்று மாநில இணை இயக்குனர் ஆய்வு



தஞ்சாவூர், நவ.13

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் முதல் சேரி கிராமத்தில் அமைக்கப் பட்ட விதை பண்ணையினை விதை சான்று மற்றும் அங்ககச் சான்று துறை, மாநில இணை இயக்குனர் சாந்தி ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது வேளாண்மை துணை இயக்குனர்கள் மாநிலத் திட்டம் மற்றும் விதை ஆய்வு, வேளாண்மை உதவி இயக்குனர்கள் மதுக்கூர், பட்டுக்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குனர் (விதைச் சான்றளிப்பு) தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் மூலமாக புதிதாக வெளியிடப்பட்ட நெல் ரகமான ஆடுதுறை 59 ரகத்தினை கொண்டு ஆதார நிலைக்கு அமைக்கப் பட்டுள்ள விதைப்பண்ணையினை பட்டுக்கோட்டை வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குனர் விதைச்சான்று, நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின் போது இந்த ரகத்தின் குணாதிசயங்களான குறைந்த நாட்களில் அதாவது 110-115 நாட்களில் வளர்ச்சி பெற்று அதிக மகசூல் தரக்கூடிய இந்த ரகத்தினை விவசாயிகளுக்கு எடுத்துச் செல்லும் வகையில் தரமான விதை உற்பத்தி செய்வதை உறுதி செய்யலாம் எனவும் பட்டுக்கோட்டை வட்டாரத்தில் அமைந்து உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தினை ஆய்வு மேற்கொண்டு தற்போது விதை சுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் TPS 5 ரகத் தினையும் அதனுடைய தரத்தினையும் ஆய்வு மேற்கொண்டு தர மான விதையை விவசாயிகளுக்கு வழங்குவதை உறுதிப் படுத்தும் நிலையில் விதை சுத்திகரிப்பு நிலைய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி, விதையினை அந்தந்த பருவத்திற்கு ஏற்றவாறு எந்தவித தங்கு தடையும் இன்றி உடனுக்குடன் சுத்தி பணி மேற்கொண்டு வழங்குவதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார். மேலும் உளுந்து விதை, ஆத்மா திட்டத்தின் கீழ் அசோலா வளர்ப்பு பை மற்றும் கால்நடைகளுக்கான குடற்புழு நீக்க மருந்து ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கினார்.

தகவல் : **ஏ.அப்சரா, வேளாண்மை உதவி இயக்குனர் (பொ), பட்டுக்கோட்டை.**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சம்பா பருவ நெல்லிற்கு பயிர் காப்பீடு செய்திட நாளை கடைசி நாள்!

இராணிபேட்டை, நவ.13

இராணிப்பேட்டை மாவட்டம். வாலாஜா வட்டாரத்தில், நடப்பு 2025-26 ஆம் ஆண்டு ராபி சிறப்பு பருவத்தில் பயிர் காப்பீடு திட்டத்தில், வருவாய் கிராம அளவில் சம்பா நெல் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ஜி.திலகவதி தெரிவித்துள்ளார்.

எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ராபி சிறப்பு பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

சம்பா நெல் பயிர்களை பயிர் காப்பீடு செய்ய நாளை (நவம்பர் 15) கடைசி நாளாகும். இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் (குத்தகைதாரர் உட்பட) பயிர் கடன் பெறும் விவசாயிகளும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம். இத்திட்டத்தில், நெல் II (சம்பா பருவம்) பயிருக்கு ஒரு ஏக்கருக்கு பிரீமியமாக ரூ. 545 /- பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய, I) சிட்டா, II) நடப்பு ஆண்டு பயிர் சாகுபடி அடங்கல், III) ஆதார் அட்டை, IV) வங்கி கணக்கு புத்தகம், ஆகிய ஆவணங்களுடன், அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், கிராமிய வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை (CSC) அணுகலாம்.

மேலும் விவசாயிகள் இறுதிவ நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும் பயிர் காப்பீடுத் திட்டத்தில் இணைந்து தங்களது நெற் பயிரை முன் கூட்டியே பதிவு செய்யவும். இயற்கை நிகழ்வுகள் காரணமாக ஏற்படவிருக்கும் சேதங் களின் இழப்பிலிருந்து நெற்பயிரை பாதுகாத்துக் கொள்ளவும் வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டு கொள்கிறார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவண்ணாமலை, நவ.13

தற்போது கார்த்திகை பட்டம் தொடங்க இருப்பதால் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களிடம் உள்ள மணிலா மற்றும் உளுந்து விதைகளை விதைப்பிற்கு முன் பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபாருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைப்பரிசோதனை செய்த பின் விதைகளை பயன் படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன் படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத் திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவனவற்றை பரிசோதனை செய்து அதன் பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணபப்படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# நெல் தானிய நிறமாற்ற நோய்

**சாதகமான சூழ்நிலை**

பூட்டைப் பருவத்தில் அதிக ஈரப்பதம் மற்றும் மேகமூட்டத்துடன் கூடிய வானிலை

**அறிகுறிகள்**

● பயிர் அறுவடைக்கு முன்னர் அல்லது அறுவடைக்குப்பின், நோய் தாக்குதல் 13 வகை கூட்டு பூஞ்சாணங்களால் ஏற்பட்டு தானியங்கள் நிறமாற்றம் அடைகின்றன.

● நோய்த்தாக்கம் தானியத்தின் உட்புற அல்லது வெளிப்புற தாக்குதலாகவும் இருக்கலாம். இதனால் உமிச்செதில் (அ) நெல்மணிகள் (அ) இரண்டும் நிறமாற்றம் அடைகின்றன. கரும்பழுப்பு அல்லது கரும்புள்ளிகள் தானியங்களின் மேல் காணப்படும்.

● நோய்க்காரணி மற்றும் நோய் தாக்கத்தின் அளவு ஆகிய வற்றின் அடிப்படையில் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, இளஞ்சிவப்பு, அல்லது கருப்பு நிறங்களாக தானியங்கள் நிறமாற்றம் அடைகின்றன.

● இந்நோயினால் நெல்மணிகளின் அளவு மற்றும் தரம் குறைகின்றது.

**நெல் தானிய நிறமாற்ற நோய்க்கட்டுப்பாட்டு முறைகள்**

● நோயற்ற விதைகளைப் பயன்படுத்துதல்.

● தானியங்களை 13.5-14% ஈரத்தன்மையில் சேமிப்புக் கூடத்தில் பாதுகாக்க வேண்டும்

● ஒரு கிலோ விதைக்கு 2.0 கிராம் கார்பென்டசிம் (அ) சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 10 கிராம் என்ற அளவில் விதைநேர்த்தி செய்தல் வேண்டும்.

● சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 1 கிலோ / ஏக்கர் + 20 கிலோ மக்கிய தொழுஉரம் (அ) மணலுடன் கலந்து நடவு செய்த 20 நாட்களுக்குப் பின் வயலில் இடவும்.







● நோய் தாக்கப்பட்ட பயிர்த் தூர்களை அகற்றி அழித்துவிட வேண்டும்.

● 50% பூக்கும் பருவத்தில் வேப்பெண்ணெய் 3% (அ) கார்பென்டசிம் (50 wp) 100 கிராம் அசாக்ஸிடிராபின் (25 % SC) 100 மி.லி (அ) மேன்கோசெப் (75% WP) @ 400 கிராம் கார்பன்டாசிம் (50% WP) +மான்கோசெப் (75% WP)+ திரம் (75% WS) 1:1:1@ 0.2% (அ) டெபுகோனசோல் 50%+டிரைபிளாக் சிஸ்ட்ரோபின் 25% (75% WG ) 80 கிராம் இவற்றில் ஒன்றை ஏக்கருக்குத் தெளிக்கவேண்டும் என சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கூறினார்.



# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவண்ணாமலை, நவ.13

தற்போது மழை அதிகளவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்து இருப்பதால் விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைப்பரிசோதனை செய்த பின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்பு திறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரகவிதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரககலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவனவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

| வ.எண். | பயிர் | குறைந்த முளைப்புதிறன் |
|---|---|---|
| 1. | நெல் | 80% |
| 2. | மணிலா | 70% |
| 3. | புச்சைபயிறு | 75% |
| 4. | உளுந்து | 75% |
| 5. | கம்பு | 75% |
| 6. | ராகி (கேழ்வரகு) | 75% |
| 7. | சோளம் | 75% |
| 8. | காரமணி | 75% |
| 9. | மக்காசோளம் வீரிய ஒட்டு இரகம் | 90% |
| 10. | பருத்தி இரகம் | 65% |

| | | |
|---|---|---|
| 11. | பருத்தி வீரிய ஒட்டு ரகம் | 75% |
| 12. | தக்காளி | 70% |
| 13. | கத்தரி | 70% |
| 14. | மிளகாய் | 60% |
| 15. | வெண்டை | 65% |

மேற்கண்ட விதை மாதிரிகளை பரிசோதனை செய்து கொள்ள விதைப்பரிசோதனைக் கட்டணம் ஒரு மாதிரிக்கு ரூ.80/- செலுத்த வேண்டும். விவசாயிகள் 400 கிராம் எடையுள்ள விதை யினை பயிர் மற்றும் இரகம் குறிப்பிட்டு விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை - 606 604 என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அளித்து விதையின் தரத்தினை தெரிந்து கொள்ளலாம்.

## திருந்திய நெல் சாகுபடி - பயிர் விளைச்சல் போட்டிக்கு விவசாயிகளுக்கு அழைப்பு!

சேலம், நவ.13

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி பயிர் விளைச்சல் போட்டிக்கு, விண்ணப்பிக்க வர வேற்கப்படுகின்றன.

இது குறித்து, காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது, இந்த பருவத்தில் சம்பா திருந்திய நெல் சாகுபடி உத்தியை கடைபிடித்து நெல் சாகுபடி செய்துள்ள காடையாம் பட்டி வட்டார விவசாயிகள் தமிழ்நாடு அரசு நாராயண சாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது அறிவிக்கபட்டு உள்ளது. இந்த விருது மாநில அளவில் முதல் பரிசு பெறுவோர் ரூ.5 லட்சம் பரிசும் ரூ.7 ஆயிரம் மதிப்புள்ள பதக்கம் வழங்கபட உள்ளது. இந்த பயிர்விளைச்சல் போட்டியில் பங்கேற்க குறைந்த பட்சம், இரண்டு ஏக்கர் திருந்திய நெல் சாகுபடி செய்திருக்க வேண்டும். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் நெல் சாகுபடி செய்து முன்னோடி விவசாயியாக இருத்தல் வேண்டும். போட்டியில் கலந்து கொள்ள, அரசால் அங்கீகரிக்க பட்ட நெல் ரகங்களை பயிரிட வேண்டும். இதற்கு பதிவு கட்டணம் ரூ. 150 செலுத்த வேண்டும் என்று அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கபட்டுள்ளது.

# பயிர் காப்பீடு திட்டத்தில் இணைய அறிவுறுத்தல்

இராணிப்பேட்டை, நவ.13


இராணிப்பேட்டை மாவட்டம், திமிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராமன் கூறியதாவது,

எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும் அவர்களுக்கு நிலையான வருமானம் கிடைக்க செய்து விவசாயத்தை பெருக்கவும் மத்திய அரசின் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். தற்பொழுது வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது.

மேலும் கனமழை எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் எதிர்பாராத இயற்கை சீற்றத்தின் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ரஃபி சிறப்புப் பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்து பயனடைய வேண்டும். 2025- 26-ம் ஆண்டிற்கான சம்பா நெல் பயிர்களை பயிர் காப்பீடு செய்ய வரும் நவம்பர் 15 ஆம் தேதி கடைசி தினமாகும்.

இந்த திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் மற்றும் பயிர் கடன் பெறும் விவசாயிகளும் கடன் பெறாத விவசாயிகளும் அவரவர் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம். இந்தத் திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய சிட்டா நடப்பாண்டு பயிர் சாகுபடி அடங்கல் ஆதார் அட்டை வங்கி கணக்கு புத்தகம் உள்ளிட்ட ஆவணங் களுடன் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக் கிளைகள் கிராமிய வங்கிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை அணுகலாம். இந்தத் திட்டத்தின் கீழ் நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு பிரீமியமாக ரூ.545/- செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம் என கூறினார்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தாவரத்திலிருந்து இறைச்சியா?



தாவரத்திலிருந்து இறைச்சி தயாரிக்கப்படுவது தொழில் நுட்பத்தின் உச்சகட்டமாக பார்க்கப் படுகிறது. இறைச்சிக்கு அடிப்படை தேவையானது புரதமும் கொழுப்பும் தான். இவை முழுக்க முழுக்க தாவரங்கள் காய்கறிகள் மூலமாக கிடைக்க பெற்று தாவர இறைச்சியை (மாமிசத்தை) அச்சடிக்கப்பட்ட தொழில் நுட்பம் மூலமாக பெறலாம். இது தான் இன்றைய விஞ்ஞான உலகை கலக்கி வருகிறது என்றால் மிகையல்ல.

**அது எப்படி?**

தொட்டு பார்த்தால் கொழுப்பு... முகர்ந்து பார்த்தால் இறைச்சி வாடை (மட்டன் சுமல்)... வெட்டி நறுக்கிப் பார்த்தால் இரத்தம். ஆனால் இது மாமிசம் மட்டன் இல்லை?... எப்படி என்று கேட்காதீங்க.?

அதுதான். ....3D PLANT......BASED MEAT TECHNOLOGY.

**தயாரிப்பது எப்படி?**

சோயா, பட்டாணி, கொண்டைக்கடலை போன்றவற்றி லிருந்து புரதத்தையும், காய்கறிகளிலிருந்து கிடைக்க கூடிய எண்ணெயும் (VEGETABLES OIL) எடுத்து பேஸ்ட் போன்று (PASTE) அரைக்கின்றனர். கொழு கொழுவென அரைக்கபட்ட பசையிலிருந்து அடுக்கடுக்காக இறைச்சியை அச்சடித்து தருகின்றனர். இந்த 3டி பிரிண்டர் அச்சடிக்கப்பட்ட இறைச்சியை தொட்டுப் பார்த்தால், முகர்ந்து பார்த்தாலே, ஏன் சுவைத்தால் கூட இறைச்சி போன்றே இருக்கிறது. இதைத்தான் 3D PRINTED MEAT என்கிறோம்.

**இரத்தம் மாமிசம் போல எப்படி வருகிறது தெரியுமா?**

நறுக்கி வெட்டி பார்த்தால் இரத்தம் வடிகிறது. அது எப்படி? என்று நீங்க கேட்பது காதில் ஒலிக்கிறது.

பீட்ரூட் ஜூஸ் போன்ற இயற்கை நிறப் பொருட்களைக் கொண்டு, செயற்கையான இரத்தத்தையும், சோயாவிலிருந்து

(SOYA HEMOGLOBIN) இறைச்சி போன்ற இரத்தத்தையும் கொண்டு தான் ரத்த சுவையும் வாடையும் கொடுக்கப்படுகிறது. இதைத் தான் (PLANT BASED BLOOD) என்கிறோம்.

**இந்த தொழில்நுட்பம் முதலில் எங்கு தோன்றியது?**

2018யில் இஸ்ரேல் சார்ந்த ESCHAR BEN SHIRTRIT மற்றும் ADAM LAUAU இருவரும் சேர்ந்தது முதன்முதலில் (REFINED MEAT) என்ற நிறுவனத்தை தொடங்கினார்.

இதனுடைய நோக்கம் மிருகங்களை விலங்குகளை சித்திர வதை படுத்தாமல் இறைச்சிக்கு மாற்றாக அதுபோல ருசி கொண்ட உணவை மட்டனை வழங்குவதாகும்.

இதுபோல எண்ணற்ற நிறுவனங்கள் உருவாகி (சேவர் ஈட் (SAVOR EAT), ஸ்பெயினிலிருந்து (NOVA MEAT) போன்ற பல நிறுவனங்கள் அடுத்து அடுத்து உருவாகி தாவர இறைச்சியை தயாரிக்கின்றனர்.

**இந்தியாவிலே இது போன்ற தயாரிபபு உண்டா?**

இந்தியாவின் மக்கள் தொகையில் 71% மாமிசத்தை விரும்பி உணவாக உண்ணுக்கூடியவர்கள். காலநிலை மாற்றத் திற்கேற்ப இது பெரும் சவாலாக உள்ளது என பதஞ்சலி நிறுவனம் நீயூட்ரலா ‘ என்ற தாவர மாமிச உணவை உற்பத்தி செய்வதாக தரவுகள் உள்ளன.

என்னதான் அது இறைச்சியை போல இருந்தாலும் அது இயற்கையானது அல்ல (ULTRA PROCCESED FOOD) என்பதை நாம் மறந்து விடக்கூடாது என இயற்கை ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# இப்கோ - நானோ யூரியா பிளஸ்-ஓர் பார்வை

சென்னை, நவ.13

நானோ யூரியா பிளஸ் 20% தழைச்சத்து கொண்டது. பயிர்களுக்கு தேவையான தழைச்சத்தை திறம்பட பூர்த்தி செய்து, பயரின் வளர்ச்சியை அதிகரிக்கும். மேலும் நுண்ணூட்டச் சத்துக்களின் செயல்திறன் மற்றும் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்.

## பயன்படுத்தும் முறை

ஒரு மூடி நானோ யூரியா பிளஸ் பாட்டிலின் அளவு=25 மி. லி.

## இலை வழி தெளிப்பு

2 -4 மி.லி. நானோ யூரியாவை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு, தூர்விடும் தருவாயில்) முதல் தெளிப்பாகவும், முதல் தெளிப்பு தெளித்த 20-25 நாட்களுக்கு பிறகு அல்லது பூக்கும் பருவத்திற்கு முன்பு இரண்டாம் தெளிப்பு தெளிக்கலாம். (குறிப்பு : யூரியா, டி.ஏ.பி. அடி உரத்தை தவிர்க்க வேண்டாம், மேல் உரமாக அளிக்கப்படும் யூரியாவை தவிர்த்து நானோ யூரியா பிளஸ் திரவ உரத்தை பயன்படுத்தவும்.)

ஒரு ஏக்கருக்கு 250-500 மி.லி. நானோ யூரியா பிளஸ் பயன்படுத்தவும்.

## தெளிப்பான்கள் பொருத்து நானோ யூரியா பிளஸ் அளவு

**பேட்டரி தெளிப்பான்** : 15-16 லிட்டர் டேங்கிற்கு 2-3 மூடி (50-75 மி. லி.) பயன்படுத்தவும்.

(பொதுவாக ஒரு ஏக்கருக்கு 8 முதல் 10 டேங்க் போதுமானது).



**விசை தெளிப்பான் :** 20-25 லிட்டர் டேங்கிற்கு 3-4 மூடி (75-100 மி.லி.) பயன்படுத்தவும்.

(பொதுவாக ஒரு ஏக்கருக்கு 4 முதல் 6 டேங்க் போதுமானது).

**ட்ரான் தெளிப்பான் :** 10-12 லிட்டர் டேங்கிற்கு 250-500 மி.லி. நானோ யூரியாவை பயன்படுத்தவும்.

(பொதுவாக ஒரு ஏக்கருக்கு 1 டேங்க் போதுமானது).

இப்கோ நானோ உரங்கள், சங்கட ஹரன் பீமா யோஜனா-வின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.



# அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் நிலக்கடலை பண்ணை பள்ளி


சேலம், நவ.13

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் விவசாயிகள் பண்ணை பள்ளி சிறந்த வேளாண்மை தொழில்நுட்ப நடைமுறைகள் என்ற தலைப்பில் நிலக்கடலை பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகள் பண்ணைப் பள்ளியின் இறுதி வகுப்பு வெள்ளியம்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

இதில் உதவி தொழில் நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி விவசாயிகளை வரவேற்று அட்மா திட்டம் குறித்து விளக்கம் அளித்தார்.

அமைப்பு சாரா தொண்டு நிறுவன அமைப்பாளர் எம்.ஜி.வெங்கடாசலம் கலந்து கொண்டு அறுவடைக்கு பின் நிலக்கடலையை தூய்மைப்படுத்தி, தரம் பிரித்து, வெயிலில் உலர்த்தி, ஈரப்பதம் இன்றி நன்கு காய வைத்து பின் கடலையை விதைக்கு பயன்படுத்தலாம் என அறிவுறுத்தினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி, அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் நிலக்கடலையினை அறுவடைக்குப் பின் மதிப்பு கூட்டி நிலக்கடலை பர்பி, நிலக்கடலை உருண்டை போன்ற பொருள்களாக மதிப்பு கூட்டி விற்பனை செய்யவும் மற்றும் சிறு தானியங்களை அதிரசம், அடை, சத்துமாவுகளாக தயாரித்து, விற்பனை செய்வதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும், வருமானம் இரட்டிப்பாகும் என விளக்கமளித்தார். விவசாயிகளுக்கு கைப்பை வழங்கப்பட்டது. முடிவில் நன்றி உரை கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர் களான செல்வி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



# தஞ்சை மாவட்டத்தில் விதை சான்று மற்றும் அங்கக சான்று மாநில இணை இயக்குனர் ஆய்வு

தஞ்சாவூர், நவ.13

தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட விதை பண்ணைகளை விதை சான்று மற்றும் அங்ககச் சான்று துறையினுடைய மாநில இணை இயக்குனர் சாந்தி, பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் வட்டாரங்களை ஆய்வுகள் மேற்கொண்டார். இவ்வாய்வின் போது சாருமதி, வேளாண்மை துணை இயக்குனர் (மாநிலத் திட்டம்), சுஜாதா, வேளாண்மை துணை இயக்குனர் (விதை ஆய்வு), வேளாண்மை உதவி யக்குனர் மதுக்கூர், வேளாண்மை உதவி இயக்குனர் (பொ), பட்டுக்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குனர் (விதைச் சான்றளிப்பு) ஆகியோர் உடன் இருந்தனர்.



மதுக்கூர் வட்டாரம் பெரியகோட்டை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள காளிதாஸ் என்பவரால் பராமரிக்கப்பட்டு வரும் இயற்கை வேளாண்மை பண்ணை தமிழ்நாடு அங்கக சான்றளிப்பு துறையினால் சான்றளிக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையினை விதைச்சான்று இணை இயக்குனர் ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வின்போது பயிரிடப்பட்டுள்ள பாரம்பரிய நெல் ரகங்கள், தோட்டக்கலை பயிர்களான மா, கொய்யா, தென்னை, காய்கறிகள் பயிர்களை பார்வையிட்டு தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனை வழங்குவதுடன் மேலும் இவ்வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை இயற்கை வேளாண்மை மேற்கொள்வதற்காக ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கான ஊக்கத்தொகை மானியம் மத்திய, மாநில அரசு திட்டங்களையும் எடுத்துரைத்து அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது விதைச்சன்று உதவி இயக்குனர், விதை சான்று அலுவலர்கள், விதை ஆய்வாளர், வேளாண்மை அலுவலர், உதவி விதை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோர் ஆய்வின் போது உடன் இருந்தனர்.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ட்ரோன்கள் : தாவர நோய் மேலாண்மையில் ஒரு முக்கிய மாற்றம்



ஆளில்லா வான்வழி வாகனங்கள் (Unmanned Aerial Vehicles) விவசாயத்தில் புதுமையான கருவிகளாக உருவெடுத்து, பயிர் பாதுகாப்பு நடைமுறைகளில் புரட்சியை ஏற்படுத்தி உள்ளன. தொலைதூரத்திலோ அல்லது தன்னாட்சி முறையிலோ இயக்கப்படும் திறனுடன், நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு போன்ற தாவர நோய் மேலாண்மையில் அவை பரந்த பொருந்தக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளன, இது பரந்த பகுதிகளில் நோய் கணக்கெடுப்பில் உதவும். இது முன்முயற்சி மேலாண்மை உத்திகளை எடுப்பதன் மூலம் நோய் பரவலைத் தடுக்கலாம். மேலும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் மூலம் தெளித்தல் பாரம்பரிய தரை தெளிக்கும் முறைகளுடன் ஒப்பிடும் போது அதிகரித்த பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட சூழ்ச்சி மற்றும் மேம்பட்ட செயல்திறன் கொண்ட ஒரு மாற்று தாவர பாதுகாப்பு உபகரணமாக மாறியுள்ளது.

**தாவர நோய் மேலாண்மைக்கு ட்ரோன்கள் எவ்வாறு உதவுகின்றன.**

**1. நோய் கண்காணிப்பு மற்றும் முன்கூட்டியே கண்டறிதல்**

ட்ரோன்கள் விவசாயிகள் பயிர் ஆரோக்கியத்தைக் கண்காணிக்கும் முறையை மாற்றியமைக்கின்றன. நோய்கள் பரவுவதற்கு முன்பே அவற்றைக் கண்டறிவதற்கான வேகமான மற்றும் துல்லியமான அணுகுமுறையை வழங்குகின்றன. RGB, மல்டிஸ்பெக்ட்ரல், ஹைப்பர்ஸ்பெக்ட்ரல் மற்றும் தெர்மல் கேமராக்கள் போன்ற மேம்பட்ட இமேஜிங் சென்சார்களுடன் பொருத்தப்பட்ட அவை, பாரம்பரிய ஸ்கவுட்டிங் முறைகள் வெறுமனே பொருந்தாத விரிவான நுண்ணறிவுகளை வழங்குகின்றன. RGB கேமராக்கள் துரு அல்லது ப்ளைட் போன்ற தொற்றுகளால் ஏற்படும் இலை நிறமாற்றம் போன்ற நோயின் ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிய புலப்படும் ஒளியைப் பிடிக்கின்றன. குளோரோபில் உள்ளடக்கம், இலை ஈரப்பதம் மற்றும் ஒட்டு மொத்த வீரியம் மூலம் தாவர அழுத்தத்தை பகுப்பாய்வு



செய்வதன் மூலம் இதை மேலும் எடுத்துச் சென்று, புலப்படும் அறிகுறிகள் உருவாகும் முன் நோய்களைக் கண்டறிய உதவுகின்றன.

ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் இமேஜிங், நூற்றுக்கணக்கான குறுகிய நிறமாலை பட்டைகளை ஸ்கேன் செய்யும் திறன் கொண்டது. பூஞ்சை, பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுகளுடன் தொடர்புடைய நுட்பமான உயிர்வேதியியல் மாற்றங்களைக் கண்டறிகிறது. வெப்ப கேமராக்கள் பயிர்களில் வெப்ப நிலை ஏற்ற இறக்கங்களை அடையாளம் காண்பதன் மூலம் இந்த தொழில்நுட்பங்களை பூர்த்தி செய்கின்றன. இது தாவரங்கள் உடல் அறிகுறிகளைக் காண்பதற்கு முன்பே நோய் அழுத்தத்தின் முக்கிய குறிகாட்டியாகும். இந்த இமேஜிங் முறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், ட்ரோன்கள் பெரிய அளவிலான, நிகழ்நேர கண்காணிப்புக்கு ஒரு சக்தி வாய்ந்த கருவியை வழங்குகின்றன. விவசாயிகள் நோய்களை முன் கூட்டியே கண்டறியவும், தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும், இலக்கு தலையீடுகளை செயல்படுத்தவும் உதவு கின்றன. இது பயிர் இழப்புகளைக் குறைப்பது மட்டுமல்லாமல், அதிகப் படியான பூச்சிக்கொல்லி பயன்பாட்டின் தேவையையும் குறைக்கிறது. இது மிகவும் நிலையான மற்றும் செலவு குறைந்த விவசாய நடைமுறைகளுக்கு வழிவகுக்கிறது.

### 2. பூச்சிக்கொல்லிகளை துல்லியமாக தெளித்தல்

பூச்சிக்கொல்லிகளை தெளித்தல் நீண்ட காலமாக தாவர நோய் மேலாண்மையின் முதுகெலும்பாக இருந்து வருகிறது. இருப்பினும், வழக்கமான முறைகள் பூச்சிக்கொல்லிகளை அதிகமாகப் பயன்படுத்துதல், அதிக செலவுகள் மற்றும் சுற்றுச் சூழலுக்கு சேதம் விளைவிக்கின்றன. ட்ரோன்களின் உதவியுடன் துல்லியமான தெளித்தல், துல்லியமான, திறமையான மற்றும் நிலையான பூச்சிக்கொல்லி பயன்பாட்டை உறுதி செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு மாற்றமாக வெளிப்பட்டு உள்ளது. தொழிலாளர் செலவைக் குறைப்பதுடன். ட்ரோன் அடிப்படையிலான பூச்சிக்கொல்லி தெளிப்பின் நன்மைகள் உகந்த பயன்பாட்டு திறன், சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைத்தல், மனித வெளிப்பாட்டைக் குறைத்தல், மேம்பட்ட பயிர் பாதுகாப்பு, நிகழ்நேர தாவர கண்காணிப்பு, சிக்கனமான மற்றும்

அளவிடக்கூடியது. அடுத்த தலைமுறை ட்ரோன்கள் செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் சென்சார்களைக் கொண்டு உள்ளன. அவை நிகழ்நேரத்தில் தாவர ஆரோக்கியத்தைக் கண்காணிக்கின்றன. அமைப்புகள் வயலின் பல்வேறு பகுதி களில் மாறிவரும் நோய் தீவிரத்திற்கு ஏற்ப தெளிப்பு தீவிரத்தையும் கவரேஜையும் மாறும் வகையில் சரி செய்கின்றன. வேளாண் துறை பெருகிய முறையில் தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளை ஏற்றுக்கொள்வதால், நோய் கட்டுப் பாட்டில் ட்ரோன்களின் பயன்பாடு விரைவாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**3. செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு சார்ந்த நோய் கணிப்பு**

இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT) உடன் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவால் இயங்கும் ட்ரோன்கள், தாவர நோய்கள் பரவுவதற்கு முன்பே அவற்றை முன்னறிவிப்பதன் மூலம் விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன. வெறும் தொற்றுகளைக் கண்டறிவதற்குப் பதிலாக, இந்த ஸ்மார்ட் ட்ரோன்கள் வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் மண் போன்ற நிகழ்நேர சுற்றுச்சூழல் தரவுகளை பகுப்பாய்வு செய்து, உயர் தெளிவுத்திறன் கொண்ட மல்டிஸ்பெக்ட்ரல் மற்றும் வெப்ப படங்களைப் பயன்படுத்தி பயிர்களில் நுட்பமான அழுத்த சமிக்ஞைகளை அடையாளம் காணும்.

**மேம்பட்ட இயந்திர கற்றல் மாதிரிகள்**

- பின்னர் இந்தத் தகவலைச் செயலாக்கி, அதிக ஆபத்துள்ள மண்டலங்களை வரைபடமாக்குகின்றன. இது விவசாயிகளுக்கு நோய் தடுப்பில் ஒரு முக்கியமான தொடக்கத்தை அளிக்கிறது.

- புவியியல் தகவல் அமைப்புகள் (GIS) அடிப்படையிலான மேப்பிங்குடன் முன்கணிப்பு பகுப்பாய்வுகளை இணைப்பதன் மூலம், விவசாயிகள் சாத்தியமான வெடிப்பு பகுதிகளைக் காட்சிப்படுத்தலாம் மற்றும் தொற்று பரவுவதற்கு முன்பு துல்லியமான தெளித்தல் அல்லது உயிரியல் கட்டுப்பாடுகள் போன்ற இலக்கு நடவடிக்கைகளைச் செயல்படுத்தலாம். இந்த முன்னெச்சரிக்கை அணுகுமுறை அதிகப்படியான பூச்சிக் கொல்லி பயன்பாட்டைக் குறைப்பது மட்டுமல்லாமல், விளைச் சலைப் பாதுகாப்பதோடு நீண்டகால விவசாய நிலைத் தன்மையையும் ஊக்குவிக்கிறது.

● செயற்கை நுண்ணறிவால் (AI) இயக்கப்படும் நோய் முன்னறிவிப்பு மூலம், விவசாயிகள் வினைத்திறன் மிக்க உத்திகளிலிருந்து தடுப்பு உத்திகளுக்கு மாறலாம், ஆரோக்கிய மான பயிர்கள் மற்றும் மிகவும் மீள்தன்மை கொண்ட உணவு முறையை உறுதி செய்யலாம்.

**ட்ரோன் அடிப்படையிலான தாவர நோய் மேலாண்மையின் நன்மைகள்**

● **ஆரம்பகால கண்டறிதல் :** நோய்களை அவற்றின் ஆரம்ப கட்டங்களில் கண்டறிவதன் மூலம் பெரும் பயிர் இழப்புகளைத் தடுக்கிறது.

● **குறைவான பூச்சிக்கொல்லி பயன்பாடு :** பணத்தை மிச்சப்படுத்துகிறது மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவைக் குறைக்கிறது.

● **மேம்படுத்தப்பட்ட செயல்திறன் :** கைமுறையாக ஆய்வு செய்வதை விட குறுகிய காலத்தில் பெரிய வயல்களை ஸ்கேன் செய்கிறது.

● **குறைக்கப்பட்ட மனித வெளிப்பாடு :** பண்ணைத் தொழி லாளர்களுக்கு இரசாயன வெளிப்பாட்டின் அபாயத்தைக் குறைக்கிறது.

● தரவு சார்ந்த நுண்ணறிவு : துல்லியமான விவசாயத்திற்கு செயல்படக்கூடிய நுண்ணறிவை வழங்குகிறது.

**சவால்கள் மற்றும் வரம்புகள்**

● ட்ரோன் தொழில்நுட்பம் பெரும் ஆற்றலைக் கொண்டிருந் தாலும், அதற்கு சில வரம்புகள் உள்ளன.

● **அதிக ஆரம்ப செலவு :** இமேஜிங் மற்றும் செயற்கை நுண்ணறிவு திறன்களைக் கொண்ட உயர்நிலை ட்ரோன்கள் விலை உயர்ந்தவை.

● **ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள் :** பெரும்பாலான நாடுகள் விவசாயத்தில் ட்ரோன்களைப் பயன்படுத்துவதில் கடுமையான விதிமுறைகளைக் கொண்டுள்ளன.

● **திறமையான ஆபரேட்டர்களின் தேவை :** ட்ரோன்களை திறம்பட பயன்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி தேவை.

● வரையறுக்கப்பட்ட பேட்டரி ஆயுள் வேலை நேரத்தைக் கட்டுப்படுத்துகிறது. துல்லியம், செயல்திறன் மற்றும் நிலைத் தன்மையுடன் தாவர நோய் மேலாண்மையில் ட்ரோன்கள் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன.

தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன், அவற்றின் பயன்பாடு அதிக பயன்பாட்டைக் காணும், விவசாயிகளுக்கு தாவர நோய்களை திறம்பட கட்டுப்படுத்தவும், இழப்புகளைக் குறைக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் அதிகாரம் அளிக்கும். அரசாங்கங்கள், விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் தொழில் நுட்ப நிறுவனங்கள் ஒன்றிணைந்து விவசாயத்தில் ட்ரோன்களின் முழு திறனையும் உணர சவால்களை சமாளிக்க வேண்டும்.

தகவல் : ம.பானுப்பிரியா, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email:banumalai1996@gmail.com.



# மாடுகளில் சுண்டு வாதம்–ஒரு பார்வை

மாடுகளின் பின்முழங்காலில் உள்ள சில்லு எலும்பானது முழங்கால் மூட்டில் உள்ள தசை நார்ப்பகுதியில் மாட்டிக் கொள்வதால் மாடுகளில் சுண்டு வாதம் ஏற்படுகிறது. சுண்டு வாதத்தினால் மாடுகளின் உயிருக்கு ஆபத்தில்லை என்றாலும் மாடுகள் நடக்கும் பொழுது கால்களை இழுத்து இழுத்து நடப்பதால் மாடுகளின் விலை மதிப்பு பெருமளவு குறைந்து அடிமாட்டின் விலையை பெறும் நிலை ஏற்படுகிறது. சுண்டு வாதம் என்பது சரி செய்யக்கூடிய ஒரு நிலை என்பது தெரியாமல் பலர் தமது மாடுகளை மிகக் குறைந்த விலைக்கு விற்று நட்டமடைகின்றனர். மிகக் குறைந்த விலைக்கு சுண்டு வாதம் உள்ள மாடுகளை வாங்கும் இடைத் தரகர்கள் அதை சரி செய்து மீண்டும் நல்ல விலைக்கு விற்று அதிக இலாபம் பெறுகின்றனர். எனவே சுண்டு வாதம் பற்றி மாடுகள் வைத்திருப்போர் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது.

**சுண்டு வாதம் ஏற்பட காரணங்கள்**

1. உடல் பலவீனம்.

2. பின் முழங்கால் மூட்டில் செயல்படும் தசையில் ஏற்படும் பலவீனம்.

3. அதிகப்படியாக கால்களை இழுத்தல்.

4. காலில் அடிபடுதல், அதிக வயது, அதிக குளிர் போன்றவை அறிகுறிகளை அதிகப்படுத்தும்.

**அறிகுறிகள்**

சுண்டு வாதமானது ஒரு பின்னங்காலிலோ அல்லது இரு பின்னங்கால்களிலோ ஏற்படலாம். ஆனால் மாடுகளில் ஒரு கால் மட்டும் பாதிக்கப்படுவது அதிகமாக காணப்படுகிறது. மாடுகள் நிற்கும் பொழுது எந்த வித அறிகுறிகளும் தென்படாது. அதிகாலையில் கொட்டகையிலிருந்து அவிழ்க்கும் பொழுதும் பகல் பொழுதில் வெகுநேரம் ஓய்விலிருந்து விட்டு நடக்கும் பொழுதும் பாதிக்கப்பட்ட பின்னங்காலை முன்புறமாகக் கொண்டு வர முடியாமல் சிரமப் படும். பின் மிகுந்த சிரமத்துடன் காலை முன் வைத்து நடக்கும் பொழுது மாடுகள் கால்களை இழுத்து இழுத்து நடப்பது போல் தென்படும். காலை முன்புறம் கொண்டு வரும் பொழுது சடக்கென்று சத்தம் பின்கால் மூட்டிலிருந்து வரும். பதினைந்து அல்லது 20 அடிகள் நடந்தவுடன் நடப்பது சாதாரணமாகி விடும். சில மாடுகள் பாதிக்கப்பட்ட காலை வெளியே இழுத்துக் கொண்டே நடக்கும். மாடுகளை பின்னால் நடக்க வைக்க முயன்றால், மாடுகள் கால்களை

பின்னால் எடுத்து வைத்து நடக்க மறுக்கும். படுக்கும் பொழுது பாதிக்கப்பட்ட காலை நீட்டியபடியே படுக்கும். சில சமயங்களில் சில மாடுகளில் கால்களை இழுத்து இழுத்து நடப்பதனால் காலில் காயம் ஏற்பட்டு இரத்தம் ஒழுகும். இரண்டு கால்களும் பாதிக்கப் பட்டிருந்தால் நடப்பதற்கு மிகுந்த சிரமப்படும். சினை மாடுகளில் தசை நார்கள் தளர்ந்த நிலையில் இருப்பதால் சுண்டு வாதத்தின் அறிகுறிகள் அதிக தீவிரமாக காணப்படும்.

**சிகிச்சை முறை**

சுண்டு வாதத்தை இரண்டு வகையான சிகிச்சை முறைகள் மூலம் குணப்படுத்தலாம். ஒன்று மருத்துவ சிகிச்சை முறை மற்றொன்று அறுவை சிகிச்சை முறை. மருத்துவ சிகிச்சை முறையில் 'டிங்சர் அயோடின்' அல்லது 'லூகால்ஸ் அயோடின்' என்ற மருந்தானது பாதிக்கப்பட்ட பின் முழங்கால் மூட்டில் ஊசி மூலம் செலுத்தப் படுகிறது. இதனால் மருந்து செலுத்தப்பட்ட மூட்டில் முதலில் வீக்கம் ஏற்பட்டு பின் படிப்படியாக வீக்கம் குறைந்து ஓரிரு வாரங்களில் சரியாகி விடும். இந்த முறையில் சுண்டு வாதத்தை குணப்படுத்தும் பொழுது மாடுகளுக்கு இரண்டு முதல் 3 வாரம் வரையில் கண்டிப்பாக ஓய்வு கொடுக்க வேண்டும்.

அறுவை சிகிச்சை முறை மூலம் குணப்படுத்தும் பொழுது முழங்கால் மூட்டில் இருக்கும் தசை நாரில் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சைக்குப் பின் சுண்டு வாதம் சரியாகி உடனே மாடுகள் நல்ல முறையில் நடக்க ஆரம்பித்து விடும்.

சுண்டு வாதத்திற்கு செய்யக் கூடிய அறுவை சிகிச்சையானது செலவு அதிகமாகாத, எளிதாக செய்யக்கூடிய ஒன்றாகும். எந்த முறையில் சிகிச்சை செய்தாலும் கால்நடை மருத்துவர் மூலமே குறிப்பாக சுண்டு வாத சிகிச்சையில் தேர்ச்சி பெற்றவர் மூலமே சிகிச்சை செய்ய வேண்டும். எனவே மாடுகள் வளர்ப்போர் தங்களின் மாடுகளில் சுண்டு வாதம் ஏற்பட்டால் தங்களின் விலை மதிப்பு அதிகம் உள்ள மாடுகளை அடிமாடு விலைக்கு விற்காமல், சுண்டு வாதம் பற்றிய பயம் கொள்ளாமல் தகுந்த சிகிச்சை செய்து எளிதில் குணப்படுத்தி விடலாம்.

தகவல் : **டாக்டர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

**Rithvik Pipe**

IS 4985 : 2021 · IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW · isha · POWERGRID · BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**